1979 மார்ச் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

இது சம்பந்தமாக நாகப்பட்டிணம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

இவர்கள் அனைவருக்கும் காவல் துறையினால் பாதுகாபபு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே காவல் துறையினர் கட்சித் தலைவர்களை கைது செய்வதால் தான் மிரட்டல் கடிதங்கள் வருகின்றன என்று கூறுவது சரியல்ல. அரசு இதுபற்றி தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த அடிப் படையில்தான் சில கைதுகள் செய்யப்படுகின்றனவே தவிர, அரசியல் கட்சி தலைவரவர்களை கைது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை சட்டப்பேரவை உறுப்பி னர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்கிற காரணத்தினால் சட்டமன்ற இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத் தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) திருவண்ணாமலை அருகில் துரிஞ்சாபுரத்தில் தடியடிப் பிரயோகம் செய்யப்பெற்று, விவசாயிகள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> வட ஆற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் கிராமத்தில் 25-3-1979-ல் 44 விவசாயிகளைக் கைது செய்ததின் காரணமாக திருவண் ணாமலை கோட்டாட்சித் தலைவர் அவர்களை சந்தித்து மனுக் கொடுக்க ஊர்வலமாகச் சென்ற விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களை 26-3-1979 அன்று கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் முன் கண்ணீர்ப்புகை வீசியும் தடியடிப் பிரயோ கம் செய்தும் 198 விவசாயகளைக் கைது செய்து வழக்குப் போடப்பட்டும் இருப்பதால் அந்தப் பகுதியில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு திருவாளர்கள் பெ.சு, திருவேங்கடம், திரு. த. வேணுகோபால், கூத்தகுடி ச. சண்முகம், எஸ். சிவ சாமி, சேலம் மு. ஆறுமுகம், ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன். ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துச்சாமி, கோ. இளங்கோவன் வீ. கே. கோதண்டராமன், ஆர். உமாநாத், சி. கோவிந்த

ராசன், எம். எ. லத்தீப், ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த துரிஞ்சாபுரம் கிராமம் கலசபாக்கம் தொகுதியிலே இருக்கின்ற காரணத்தால், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காரணத்தால், ஓரிரு நிமிடங்கள் அதிகமாகப் பேசுவதற்கு உதவ வேண்டும். துரிஞ்சாபுரம் கிராமத்தில் ஏற்கனவே விவசாய சங்கத்தினர் தங்களுடைய தலைவராக இருக்கின்ற நாராயணசாமி நாயுடு அவர்களை அழைத்து வந்து, விவசாய சங்கத்தை நிறுவி, ஒன்பது கோரிக்கைகளை ஒரு போர்டிலே எழுதிவைத்து, கடந்த 2, 3 மாதகாலமாக இருந்து வருகிறது. ஆனால், இன்றையதினம் அந்தப் பகுதியிலே கடுமையான மின்சார வெட்டும், ஆயில் என்ஜின்களுக்கும் தேவையான எண்ணை கிடைக்காததினாலும், அதுபற்றி கவலைப்பட்டு கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்த போர்டை அகற்ற வேண்டுமென்று திருவண்ணாமலை கோட்டாட்சித் தலைவரும், திருவண்ணாமலை துணைக் காவல் துறை அதிகாரியும் அங்கே சென்றிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அங்கே சில விவசாய இளைஞர்கள், இந்த போர்டை அகற்றுவதிலே அக்கறை செலுத்துகிறீர்களே, ஏன் எங்களுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது, அல்லது எங்கள் ஆயில் என்ஜின்களுக்குத் தேவையான எண்ணை தரக்கூடாது என்று கேட்டிருக்கிறார்கள். அங்கேயே அவர்கள் அவர்களை மிகவும் பயமுறுத்தியும், பொதுமக்களை எல்லாம் அடித்தும், 44 விவசாயிகளை கைது செய்தும், அவர்களுக்கு 2, 3 வேளைகள் சாப்பாடு கொடுக்காமலும், அவர்களின் மீது பல பொய்யான வழக்குகளையெல்லாம் போட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி, அந்தப் பக்கத்திலே உள்ள பெருவாரியான விவசாயிகள் மத்தியிலே ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. உடனே, திருவண்ணாமலைப் பகுதியிலே உள்ள விவசாயிகளும், தண்டராம்பட்டு பகுதியிலே உள்ள விவசாயிகளும் ஏறக்குறைய 2,000 விவசாயிகள் நேற்றைய தினம், திருவண்ணாமலையில் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். அமைதியான முறையிலே நியாயமான கோஷங்கள் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். "மின்சாரம் வேண்டும், விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற ஆயில் என்ஜினுக்குத் தேவையான எண்ணை வேண்டும் நெல்லுக்கு நியாயமான விலை வேண்டும், ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள விவசாயிகளை விடுதலை செய்யவேண்டும். அவர்கள் மீது வழக்கு போடக்கூடாது" சொல்லி ஊர்வலமாக வந்திருக்கிறார்கள் ஆனால் அப்படி வந்த அந்த விவசாயிகளுடைய ஊர்வலம் அங்குள்ள ஆர். டீ. ஓ. ஆபீசுக்கு

1979 மார்ச் 27] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

எதிரில் சென்றபோது, உடனே திடீரென்று போலீசார் எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் இன்றி தாக்கியிருக்கிறார்கள். கண்ணீர்ப்புகை பிரயோகித்திருக்கிறார்கள். அந்த ஊர்வலத்திலே வந்த தாய்மார்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக்கெல்லாம் ஒரு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நேற்றைய தினம் 198 விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதிலே மேலும் ஒரு கொடுமையான சம்பவம் நடந்திருக்கிறது. இதிலே அடிபட்ட தாய்மார்களையும், விவசாயிகளையும் திருவண்ணாமலை நகரத்திலே இருக்கின்ற மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றபோது, அங்குள்ள மருத்துவ அதிகாரி அவர்களுக்கு மருத்துவம் செய்ய மறுத்து விட்டார். பிறகு அவர்கள் தனிப்பட்ட டாக்டர்களிடம் வைத்தியம் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நிலவுவதால், இன்றையதினம் இந்த விவசாயிகள் ஊர்வலமாகச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். எனவே, இவைகளையெல்லாம் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துரிஞ்சாபுரம் விவசாயிகள் இயக்கத்தின் மத்தியிலே ஏற்பட்டுள்ள இந்த பரபரப்பு, அந்த வட்டாரத்திலே மாத்திரம் அல்ல, தமிழகம் பூராவும் ஏற்பட்டுள்ள ஒரு சம்பவமாகும். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அவர்களுடைய அபிப்பிராயங்களை அமைதியான முறையிலே கோஷங்களாக எடுத்துச் சொன்னார்கள் என்பது இன்றைக்கு பத்திரிக்கைகளிலேயும் வந்திருக்கிறது. ''நெல்லுக்கு நியாய விலை, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்' போன்ற இந்த மாதிரியான காரணங்களை வைத்துத்தான் அவர்கள் போராடி இருக்கிறார்கள். இந்த நேரத்திலே அரசாங்கம் கூட ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். நியாய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக அமைச்சர் அவர்கள்கூட உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. எனவே, தமிழ்நாடு விவசாயிகள் கோரிக்கைகள் நியாயமானது என்பதை அமைச்சர் அவர்களே உணர்த்திருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினை பற்றி மிகக் கவலையோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையிலேயே இதிலே 7 பேர்கள் காயமடைந்திருக்கிறார்கள், அவர்கள் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றிருக்கிறது. மற்றும் காயம் அடைந்தவர்கள் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டாலும், எண்ணிக்கை அதிகமாகிவிடுமென்று சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். இது

மாத்திரமல்ல, 160 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, அதை அமுல் படுத்துவதற்குப் பதிலாக, இந்த மாதிரி போலீசை வைத்து அடக்குவது அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது, அப்படி நடவடிக்கை எடுக்கும்போது காயம்பட்டவர்களை மருத்துவ மனையிலே சேர்த்தால் எங்கே எண்ணிக்கை அதிகமாகத் தெரியப் போகிறதோ என்பதற்காக சேர்க்காமல் இருப்பது போன்ற நடவடிக்கைகளால் அங்குள்ள மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அவையை ஒத்திவைத்து, இதனை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முக்கியமான தொழில் விவசாயத் தொழில். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் இன்றைய தினம் பல கோரிக்கைகளை வைத்து போராடுகிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்குப் போராடும்போது 44 விவசாயிகளைக் கைது செய்தார்கள் என்பதற்காக அவர்களை விடுவிக்க வேண்டுமென்று கோரி துரிஞ்சாபுரம், தண்டாரம்பட்டு போன்ற பகுதிகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் ஆடவர்களும் பெண்டிரும் திருவண்ணாமலை சப்-கலெக்டர் அலுவலகத்திற்கு அணி வகுத்துச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. காவல் துறையினர் எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். காயம்பட்டவர்களுக்கு நியாயமாக வழங்கப்படக்கூடிய மருத்துவ சிகிச்சை கூட அரசினர் மருத்துவ மனையில் மறுக்கப்பட்டிருக்கிறது. 198 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இன்றையதினம் அரசு ஒன்றை உணரவேண்டும். இன்றைக்கு நாட்டிலே உழவன் சேற்றிலே கால் வைக்காவிட்டால் நாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்பதை உணர்ந்து இந்த முக்கியமான பிரச்சினை பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன்: துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடு முழுவதும் விவசாயிகளுடைய பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற இந்த நேரத்தில் அவர்கள் மீது போலீஸ் அடக்குமுறை ஏவி விடப்பட்டு 198 பேருக்கு மேல் கைது

1979 மார்ச் 27] [திரு. பொ. விஜயராகவன்]

செய்யப்பட்டிருக்கிறார்கள் பலர் காயமடைந்திருக்கிறார்கள். பெண்கள் உட்பட பலருக்கும் காயம் ஏற்பட்டும் அவர்களுக்கு சிகிச்சை கூட அரசு மருத்துவ மனைகளில் அளிக்க மறுக்கப் படுகிறது. தமிழகம் முழுவதும் இந்த நிலைமை பரவிவிடுகிற நிலைமையில் பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது. விவசாயி களுடைய அந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் அவர் களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் நிவாரணம் கொடுக்கும் வகையில் இந்த மன்றத்தில் விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தமிழகத் திலே விவசாயிகளுடைய குறைபாடுகள் எல்லாம் தீர்க்கப்பட வில்லை என்று விவசாயிகள் மத்தியில் ஒரு அதிருப்தி இருக்கிறது. அந்த அதிருப்தியைத் தெரிவிக்குமுகத்தான் தமிழகத்தின் எல் லாப்பகுதிகளிலும் போராட வேண்டுமென்ற எண்ணம் உறுதி யாக ஏற்பட்டிருக்கிறது. இந்தப் போராட்ட எண்ணத்தை வளர்க்கக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை இருக்கக்கூடாது அவர்கள் போராட வேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்றால், அரசை எதிர்த்து அரசியல் காரணங்களுக்காகப் போராடு கிறார்கள் என்று எடுத்து விடக் கூடாது. அவர்களுக்கு உண்மை யான குறைபாடுகள் இருக்கின்றன. அவை தீர்க்கப்படாமல் நீண்ட நாட்களாக ஒத்தி வைக்கப்பட்டு வருகிறது. உயர்மட்டக் குழு அறிக்கை வந்த பிறகு முடிவு எடுக்கப்படும் என்று அரசு சொல்லுகிறது. அதுவரை எந்தவிதமான அசம்பாவிதமான சம் பவங்களும் நடக்காத வகையில் அவர்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் அரசு எந்தச் செயல்பாட்டையும் செய்யக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு நடவடிக்கை யால் சில அசம்பாவிதங்கள் வருகிறபோது அங்கு கண்ணீர்ப் புகை, தடியடி நடைபெற்றிருக்கிறது. இந்த மாதிரி சம்பவங்கள் எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? இந்த மாதிரிச் சம்பவங்கள் ஏற்படாமல் தடுத்து நிறுத்தி பிரச்சினைகளைத் தீர்க்க வேண் டியது அரசாங்கத்தின் கடமை என்பதை சுட்டி காட்டுவதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்துணை நாட்களாக விவசாயிகளிடையே நடை பெற்று வருகின்ற இந்தப் போராட்டத்தினுடைய தன்மைகள், விவசாயிகளுக்கு இருக்கின்ற குறைகள், அவைகளை நீக்கவேண்டு மென்ற தன்மையிலே அமைந்து இருந்தன. இன்றைக்கு வட

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 மார்ச் 27

ஆற்காடு மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள நிலைமையையும், அதையொட்டி மற்றப்பகுதிகளிலே ஏற்பட்டுள்ள பாரதூரமான நிலைமைகளையும் சிந்தித்துப் பார்த்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே நேற்றைய தினம், நடந்த சம்பவத்திற்கு அரசாங்கம் தான் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

மார்ச் 17 ஆம் தேதியன்று மின்சாரத் துறை அமைச்சர் ஏப்ரல் 3 ஆம் தேதி வரையில் எந்தவிதமான மின் இணைப்புத் துண்டிப்பும் நடைபெறாது என்று இந்த அவையிலே வாக்குறுதி தந்தார்கள். ஆனால் அதற்கு மாறாக, போளூர் வட்டாரத்திலே துரிஞ்சாபுரம் பகுதியிலே வட ஆற்காடு மாவட்டத்தின் இதர பகுதிகளிலே அரசாங்கத்தினுடைய வாக்குறுதியை மீறி, 4 இடங்களில் போளூர் பகுதியிலே 4 மின் இணைப்புக்கள் துண்டிக்கப் பட்டிருக்கின்றன, 17 ஆம் தேதிக்குப் பிறகு அரசாங்கம் வாக்குறுதி தந்திருக்கிறது, எங்களுக்கு மூன்றாம் தேதி வரையில் தவணை தாருங்கள் என்று அவர்கள் கேட்டும், மின் இணைப்புத் துண்டிக்கப்பட்ட அந்த 4 இடங்களிலேயும் விவசாயிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர்கள் எதிர்ப்புத் தெவித்த காரணத்தால் விவசாயிகள் பயங்கரமாக அடிக்கப்பட்டு 44 பேர்கள் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் ஜாமீனிலே வெளியே வந்தார்கள்.

இந்த நிலைமைகள் தொடர்ந்து இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் கோட்டாட்சித் தலைவருக்கு ஒரு மனுவைத் தரவேண்டுமென்ற முறையிலே மின்சாரத் துறை அமைச்சர் சட்டப் பேரவையிலே தந்த வாக்குறுதியை மீறிக் காரியங்கள் நடக்கின்றன, அதைத் தடுக்கவேண்டுமென்ற முறையிலே ஒரு மனுவை திருவண்ணாமலை கோட்டாட்சித் தலைவரிடம் தரவேண்டுமென்று அங்கே அவர்கள் சென்று இருக்கிறார்கள். அங்கே சென்ற நேரத்திலே ஏற்கெனவே கைதுசெய்யப்பட்ட 44 பேர்கள் வெளியே வந்திருக்கிறார்கள், அவர்களோடு இவர்களும் சேர்ந்து கொண்டு அங்கே போய் இருக்கிறார்கள்; அவர்கள் அங்கே சென்ற நேரத்திலே நீங்கள் கோட்டாட்சித் தலைவரிடத்திலே மனுக் கொடுக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டு, போலீஸார் அவர்களிடம் தகாத முறையிலே நடந்துகொண்டபோது ஒரு பதட்ட நிலைமை உருவாகியது. அப்போது அந்த விவசாயிகள்மீது கண்ணீர்ப்புகை, தடியடிப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது, அதன் காரணமாக பலர் காயமடைந்திருக்கிறார்கள். நான் வேலூரிலிருந்து போய்க்கொண்டிருந்தபோது நான் மடக்கப்பட்டு அந்தப்

1979 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கேயிருந்த பதட்டமான நிலைமைதான் சோகமான நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அரசாங்கத்தின் வாக்குறுதியை மீறி யார் நடந்திருந்தாலும், யார் மின்னிணைப்புத் துண்டித்திருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிற்கு நல்லதல்ல. விவசாயம் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக காரியங்கள் நடைபெறுகின்றன. இதைப்பற்றிய எல்லா அம்சங்களையும் விவாதித்து ஒரு நல்ல முடிவு எடுக்க விவசாயத் துறைக்கு ஏற்பட இருக்கின்ற ஒரு மாபெரும் ஆபத்தைத் தடுக்கக்கூடிய முறையிலே எல்லா உறுப்பினர்களும் ஆற அமர பேசுவதற்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே துரிஞ்சாபுரம் பகுதியிலே ஏற்பட்டிருக்கிற விவசாயிகள் போராட்டம் அங்கே மட்டுமல்ல, தொடர்ந்து ஒரு வருட காலமாக 100-க்கு 70 பேர்கள் என்று சொல்லக்கூடிய விவசாயிகளாக இருக்கக் கூடியவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மாநிலத்திலேயே அதிகமாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டமாக இருப்பது, வட ஆற்காடு மாவட்டம் ஆகும்.

[முற்பகல் 11—30]

அப்படிப்பட்ட மாவட்டத்திலே இன்றையதினம் 198 பேர்களைக் கைது செய்து வேலூர் மத்திய சிறைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அது நாராயணசாமி நாயுடு விவசாயச் சங்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த விவசாயச் சங்கமாக இருந்தாலும் சரி, பிரச்னைகள் வேறாக இருக்கலாம். என்றாலும்கூட அந்த விவசாயிகளை அடிப்பது, துன்புறுத்துவது. சித்திரவதை செய்வது போன்றவைகள் சர்வசாதாரணமாக இப்பொழுது இருந்து வரும் நிலைமையாகும். அரசு இதற்காகப் பொறுப்பை ஏற்க வேண்டும். அரசு போலீசைத் தூண்டிவிட்டு இந்த அளவிற்கு மோசமான அளவிற்குக் காவல்துறையினர் நடந்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? அவர்கள் கோரிக்கைகளை எழுதி வைத்திருக்கும் தட்டிகளைக் காவல்துறையினர் அப்புறப்படுத்தி இருக்கிறார்கள். ஏன் அப்புறப்படுத்த வேண்டுமென்று அதை எதிர்த்து அவர்கள் கேட்டதற்கு இந்தக் கண்ணீர்ப் புகையும், தடியடிப் பிரயோகமும் — துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை, அந்த அளவிற்கு உச்சக்

கட்டத்திற்கு இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்றால் இதற்கு அரசு பொறுப்பேற்றிருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, இதற்காக ஒரு நீதி விசாரணை கொண்டு வரப்பட வேண்டுமென்ற முறையிலேதான் இந்த விஷயத்திலே இந்த அவையை ஒத்திப்போட்டு இதைச் சரியான முறையிலே விவாதம் நடத்தித் தீர்வு காண வேண்டும். அமைச்சர் சொன்னபடியாலே இதை நான் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று தொடர்ந்து அது நடக்கிறது. ஆகவே, இப்படியே தொடர்ந்து நடக்கட்டும், அவர்களும் — போலீஸ்காரர்களும் — தொடர்ந்து அடித்துக் கொண்டே இருக்கட்டும். எங்களுக்குத் தெரியாது என்றும் சொல்லட்டும். ஹைகோர்ட்டிலே போலீஸ் 41-வது ஆக்ட்படி போட்டதிலிருந்து தமிழகத்தின் போலீஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், உமாநாத் அவர்கள் சொன்னார்கள், எங்களுக்குத் தெரியாது என்றால், அமைச்சருக்குத் தெரியாவிட்டால் ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும், தெரியாமல் நடக்குமா ? போலீஸ் அட்டகாசம் அங்கு நடக்கிறது, அங்கு மட்டுமல்ல தமிழகம் பூராவும் நடக்கிறது. இதை உடனடியாக நிறுத்தவில்லை என்றால் மாநில ரீதியாக ஒன்றுபட்ட பிரம்மாண்டமான கிளர்ச்சி வரும், இந்த அரசுக்கு அது நல்லது அல்ல, அது களங்கத்தை உண்டாக்கும் என்ற காரணத்தினால் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் அங்கே என்ன நடந்தது என்பதைப்பற்றி உண்மையிலேயே முழுத் தகவலையும் அவர்கள் கிடைக்கப் பெற்றிருப்பார்களேயானால் நிச்சயமாக இவ்வளவு நேரம்கூடப் பேசியிருக்க மாட்டார்கள் என்பது என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பேசும்பொழுது நீதி விசாரணை கூட இதற்குத் தேவை என்று சொன்னார்கள். நிச்சயமாக அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கூட கொடுத்திருக்கமாட்டார்கள்என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் உண்மைகள் முற்றிலும் வேறானவை.

திருவண்ணாமலைக்கு அருகில் துரிஞ்சாபுரத்தில் ஒரு தட்டி எழுதி வைக்கப்பட்டிருந்தது. தட்டியை எழுதி வைக்கக் கூடாதா என்று கேட்கலாம். தட்டி எழுதி வைக்கலாம், தட்டியிலே வாசகங்களும் எழுதப்படுவது உண்டு. ஆனால் இந்தத் தட்டியில்

1979 மார்ச் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

வாசங்கள் இருந்தது மட்டுமல்ல, அந்த வாசகங்கள் சில விசித்திர மானவையாக இருந்தன என்பதையும் இந்த மன்றத்தின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதிலே அவர்கள் எழுதி வைத்தது, ''அதிகாரிகளே நில்லுங்கள்; கவனியுங்கள்'' என்று சொல்லிவிட்டு '' ஒன்பது அம்சகோரிக்கையை நிறைவேற்ற கோரி தமிழக விவசாயிகள் சங்கம் வரிகொடா இயக்கத்தில் ஈடுபட்டு கடன் வரி செலுத்துவது இல்லை என்று முடிவு செய்துள்ளோம். ஆகவே கடன் வரி வசூலுக்கு ஊருக்கு வர வேண்டாம் என்று சொல்லுகிறோம்'' என்று இருக்கிறது. இது கூட பரவாயில்லை, ஆனால் அதற்கு மேலாக அவர்கள் சொல்லியிருப்பது, ''மீறி வந்து கடன் வசூலில் ஈடுபட்டால் அதனால் ஏற்படும் அசம்பாவிதத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல '' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் மன்ற உறுப்பினர்களைக் கேட்க விரும்புவது, இது சரி தானா? நடப்பது இந்தச் சட்டமன்றத்தின் சார்பில் நடை பெறுகின்ற அரசா அல்லது ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனி அரசுகளா? ஆகவே, இந்தச் சூழ்நிலைகளைப் பார்க்கிறபொழுது ஒரு அரசாங்கத்திற்கு விடப்பட்ட அறைகூவல் என்று நான் கருத வில்லை. சட்ட முறைப்படி நடக்கின்ற ஆட்சிக்கே விடப்பட்ட அறைகூவலாகத்தான் யாரும் கருதுவார்கள்.

கோட்டாட்சித் தலைவரவர்களால் அதை அப்புறப்படுத்த வேண்டும் என்று காவல் துறைக்கும், வருவாய்த்துறைக்கும் தெரி வித்தார். கிராமத் தோட்டி கிருஷ்ணன் என்பவர் அப்புறப் படுத்துவதில் ஈடுபட்டபொழுது '' ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி '' என்று சொல்லுவதைப்போல அந்தக் கிராமத்திலே இருக்கின்றவர்கள், ஏன் அப்புறப்படுத்து கிறீர்கள் என்று அரசாங்க அதிகாரிகளைக் கேட்டிருக்கலாம், ஆனால் அதற்கு மாறாக அந்தத் தோட்டியை அடித்திருக் கிறார்கள். காவல்துறைக்கு அந்தத் தகவல் தெரிவித்த உடனேயே அந்த இடத்திற்குச் சென்று அடிதடியில் யார் இறங்கினார் களோ, அவர்களில் 44 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், கைது செய்யப்பட்டு, அவர்களைக் கொண்டு வந்தவுடன், 26—3—1979 அன்று அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் சுமார் 500 பேர், ஒன்றாகச் சேர்ந்து, நேராகக் கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் வந்து, அங்கே கோஷங்களை எழுப்பி இருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், அதேபோல் போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெறுங்கள்' என்று சொல்லி, அங்கே தொடர்ந்து லிங்கம் என்பவர் தலைமையிலேயே ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை, கோட்டாட்சித் தலைவர் அலுவ லகம் முன்பு நடத்தினார்கள். காவல் துறையினர் எவ்வளவோ சொல்லியும்கூட அவர்கள் கலைந்த பாடில்லை.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூட மின்சாரத் துண்டிப்பு அடிப்படையிலே எழுந்தது என்று சொன்னார்கள். ஆனால், அப்படி அல்ல. ஆகவேதான், சரியான தகவல் அவைக்கு கிடைக்கவில்லையே என்ற அடிப்படையிலேதான் சொல்கிறேன், தட்டியை அகற்றியதனால் எழுந்தது இப்பிரச்னை.

காவல் துறையினர் கலைந்து செல்லுங்கள் என்று அறிவுறுத்தியும் அவர்கள் கலைந்து செல்லவில்லை. அதற்குப் பிறகு கூட்டத்தினர் கல் எறிந்தனர். அதற்குப் பிறகு லேசான தடியடியும், கண்ணீர்ப் புகையும் பிரயோகிக்கப்பட்டது இரண்டு டியர் கேஸ் ஷெல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே 7 பேர்கள் காயமுற்றார்கள். காவல் துறையைச் சேர்ந்த 2 பேர் கல்லெறிதலாலே காயமுற்றார்கள். 190 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறை சட்டத்தின் பிரிவு 30 (2) அமுல் படுத்தப்பட்டுள்ளது. நிலைமை நன்றாகச் சீரடைந்துள்ளது.

இப்படி, ஊருக்கு ஊர் போர்டு எழுதிப் போட்டார்களானால், அது எத்தகைய நிலைமையை உருவாக்கும் என்பதை நாம் நன்றாக ஆராயவேண்டும். ஆகவே, இது மிகப்பெரிய பிரச்னை என்று தாங்கள் கருதவில்லை. சாதாரண, சட்டம் ஒழுங்கு அமுல்படுத்த வேண்டிய சூழ்நிலையிலே எழுந்ததே தவிர வேறல்ல. ஆகவே, இதுகுறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய தேவை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசக் கூடாது. பேச விடமாட்டேன், பேசினால், பேசுவது அத்தனையையும் நீக்கிவிடுவேன். தயவுசெய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர். ஆனால், சட்டப் பேரவையில் பேசுகிறபொழுது, விவரங்களைக் கொஞ்சம் கவனத்தோடு சேகரித்து வர வேண்டுமென்பது என்னுடைய ஆசை. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மின் துண்டிப்புகள் நடைபெற்றிருக்கின்றன, வேறிடங்களில். ஆனால் இந்த ஊரில் நடைபெற்றது, தட்டிதான் அகற்றப்பட்டது. ஆகவே, இங்கே பேசுகிறபொழுது கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

திரு. எம். ஏ. லத்தீப் : .... * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன

1979 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(இ) தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்

தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலையின் பிரச்சனையை அரசு தீர்த்து வைக்காத காரணத்தால் தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் எடுத்துள்ள போராட்ட நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. க. சுப்பு, திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, புதிய தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையில் நடந்துள்ள சில முறைகேடுகள் குறித்து ஏற்கனவே இந்த அரசாங்கத்திற்குச் சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 18-1-1978 முதல் அப்படிப்பட்ட புகார்களை அங்கே இருக்கக்கூடிய தொழிற்சங்கமே கொடுத்திருக்கிறது.

[முற்பகல் 11-40]

மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி சென்றிருந்த நேரத்திலும் அவர்கள் இடத்திலும் முறையீடுகள் சொல்லப்பட்டன, மனுக்கள் கொடுக்கப்பட்டன. அதை அவர்கள் நல்ல முறையிலே கவனித்து அந்த நிர்வாகத்தை கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆபீசரை போட்டு, நல்ல முறையில் நிர்வாகம் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது நல்ல காரியம் தான். இது வரவேற்க வேண்டிய விஷயம் தான்—வரவேற்கிறேன்.

ஆனால், ஸ்பெஷல் ஆபீசரை போட்டு நிர்வாகத்தை மாற்றியிருக்கிறார்களே தவிர அந்தச்சங்க செயலாளர் அருணாசலம்—அவர் ஒரு டிரைவர்—செய்திருக்கிற ஊழல்களின்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. சுமார் 1 லட்சம் ரூபாய் அளவிற்கு